# ஹீரோஸ் ஏக்கர் நினைவிடத்தில் நமீபியாவின் தேசத் தந்தை மற்றும் முதல் ஜனாதிபதியான டாக்டர். சாம் நுஜோமா அவர்களுக்கு பிரதமர் மரியாதை செலுத்தினார் (ஜூலை 09, 2025)

ஜூலை 09, 2025

ஹீரோஸ் ஏக்கர் நினைவிடத்தில் நமீபியாவின் தேசத் தந்தை மற்றும் முதல் ஜனாதிபதியான டாக்டர். சாம் நுஜோமா அவர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மரியாதை செலுத்தினார்.

2. நமீபியாவின் சுதந்திர போராட்டத்தில் தனது வாழ்க்கையை அர்ப்பணித்த ஒரு தொலைநோக்குத் தலைவராக டாக்டர். சாம் நுஜோமா அவர்களை பிரதமர் நினைவுகூர்ந்தார். சுதந்திரம் அடைந்த நமீபியாவின் முதல் ஜனாதிபதியாக, டாக்டர். நுஜோமா அவர்கள் நாட்டை உருவாக்க பெறும் பங்களிப்பை வழங்கினார். அவரது மரபு உலகம் முழுவதும் உள்ள மக்களை ஊக்குவிக்கிறது.

3. டாக்டர். சாம் நுஜோமா அவர்கள் இந்தியாவின் நல்ல நண்பராக இருந்தார். புது தில்லியில் 1986-யில் நமீபியாவின் முதல் அரசுமுறை மிஷனை [அந்த நேரத்தில் SWAPO என்றழைக்கப்பட்டது] நிறுவும் போது அவரது சிறப்பான பங்கை எப்போதும் இந்திய மக்களால் மறக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

விந்தோக்

ஜூலை 09, 2025